# TAMIL BUSINESS

*Business Information in Tamil*

Issue 14 Nov 2004



## FREE ISSUE



"தமிழ் வணிகம்"

இலவச மாதாந்த வணிகச் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கே.எஸ். நாதனுடனான நேர்காணல்

-பக்கம் 04

## 50

ஆவது அகவை காணும் தேசிய தலைவருக்கு எமது பிறந்தநாள் வாழ்த்துக்கள்


**Cinnamon Gardens**

Buffet Special

கலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணி வரை நீங்கள் விரும்பிய உணவை £3.95 க்கு சாப்பிடக்கூடிய வசதி

42-44 Ealing Road
Wembley
020 8902 0660


## கடன் சுமையை குறைக்க Re Mortgage செய்யலாமா?

-பக்கம் 10



அனைத்துறவுகளுக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்

## அதிஷ்டம் உள்ள குழந்தைகள்

-பக்கம் 38


FAST CASH
SAME DAY MONEY TRANSFERS
Money in mintues to Sri Lanka
India & 120 Countries see ad page 5



**Tamil Business**
**P.O.Box 716, Wembley, HA0 3WL**
**www.thetamilbusiness.co.uk E email info@thetamilbusiness.co.uk**
000 506


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Interview

பி ரிதானியாவில் தஞ்சம்கோரி நிராகரிக்கப்பட்ட நிலையில் பலவந்தமான நாடு கடத்தலை எதிர்நோக்கி பல்வேறு அவலங்களுக்கு ஆளாகி வாழ்ந்து வருகின்ற பல ஆயிரக் கணக்கான எம்மவர்களின் தற்போதைய நிலைகுறித்தும் அவர்களது எதிர்காலம் பற்றியும் அறிந்து எமது வாசகர்களுக்கு தெரியப்படுத்தும் நோக்குடன். உங்கள் சார்பாக

**TB** தமிழ் அகதிகள் பற்றிய விவகாரங்களை அறிய முதல், பிரித்தானியாவில் தமிழ் அகதிகள் பற்றிய தெளிவான ஒரு புள்ளி விபரங்களை முதலில் தருவீர்களா ?

**கே.எஸ்.நாதன்** 1980ம் ஆண்டில் இருந்தே பிரித்தானியாவிற்குள் இலங்கைத் தமிழர்கள் தஞ்சம் கோரி

# திரு கே.எஸ்.நாதன்

## அவர்களுடனான ஒரு சந்திப்பு

*பிரித்தானிய அகதிகள் பணியகத்தின் (British Refugee Council-BRC) அகதிகள் விவகார ஆலோசகரும், சர்வதேச தமிழ் அகதிகளின் இணைப்பு (Tamil Refugee International Network-TRIN) ஐரோப்பாவிற்கான இணைப்பாளரும், தஞ்சம் கோரிய இலங்கைத் தமிழர்களுக்கு பாதுகாப்பளிக்கும் நடவடிக்கை குழுவின் (Committ to Defend Sri Lankan Tamil Asylum Seekers - CDSTAS) இணைச் செயலாளரும், சர்வதேச குடிவரவு விவகாரங்களின் நிபுணத்துவ ஆலோசகருமான (Consultant International Migration) திரு கே.எஸ்.நாதன் அவர்களுடான நேர்காணலின் முதற் பகுதியை இங்கு தருகின்றோம்.*

வர ஆரம்பித்தாலும் 1983ம் ஆண்டில் இருந்துதான் அதிக எண்ணிக்கையில் இங்கு வந்துசேர்ந்தார்கள் எனலாம். பிரித்தானிய குடிவரவு இலாகா (Home Office) இன் புள்ளி விபரங்கள் அனைத்துமே இலங்கையர்கள் என குறிப்பிட்டாலும் 99 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் தமிழர்கள் என்றே எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதன் அடிப்படையில் 1983ம் ஆண்டிலிருந்து 2003ஆம் ஆண்டுக்கான புள்ளி விபரங்களை முதலிலே இங்கு பார்போம்.

மொத்தம் 51115 விண்ணப்பங்கள் இலங்கையரிடம் இருந்து கிடைத்துள்ளன. இத் தொகையானது மொத்த தனிநபர்களது விண்ணப்பங்களை பிரதிபலிக்காது. Home



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FAST CASH
WORLDWIDE MONEY TRANSFERS

விரைவு – பாதுகாப்பு – உத்தரவாதம்

## Money Transfers to Sri Lanka, India
## 120 Countries

USA, Europe, Canada, Australia, Japan, Asia, Middle East

* Best exchange rate * Professional Service

## 020 8886 4488

- Immediate colection by any person
- Same day credit to any bank account
- Central bank approved official services
- Peace of mind guaranteed

Transfer fee from only £5

நீங்கள் அனுப்புகின்ற பணத்தினை இலங்கையில் 120 இடங்களில் பெறக்கூடிய வசதியுள்ளது, குறிப்பாக யாழ்பாணம் மட்டக்களப்பு திருகோணமலை வவுனியா போன்ற நகரங்களில் எமது கிளையில் விரைவாக பெறக்கூடியதாக இருப்பதுடன், உங்கள் வங்கியிலும் வைப்பு செய்ய கூடிய வசதியும் உள்ளது. அதுமாத்திரமன்றி உங்களது பணத்தினை கனடா அவுஸ்ரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் அன்றே பெறக்கூடியதாக இருக்கும்.

SEYLAN BANK LIMITED · COMMERCIAL BANK · SampathBank · PEOPLE'S BANK · HSBC · HATTON NATIONAL BANK LIMITED · Bank of Ceylon

WANT TO KNOW WHAT SRI LANKANS ARE DOING IN THE UK ?

## www.uklanka.net

THE MOST COMPREHENSIVE WEB DIRECTORY LISTING SOCIAL, CULTURAL & BUSINESS LINKS IN THE UK

UKLanka.net

OBA-OGA CLASSIFIEDS RESTURANTS EVENTS

CARS MARRAIGE FRIENDS HOUSES

Send Flowers, Fruit Baskets, Hampers and many more items to Sri Lanka.

## WWW.COLOMBOSTORES.COM

We deliver your appreciations to the door step.

For more information contact :

TEL : (+44) - 20 8886 4488 FAX : (+44) - 20 8886 4499

E-mail : info@uklanka.net / info@colombostores.com

FLOWERS DELIVERED £15

GIFTS DELIVERED £15

**The UK Yellow Pages for Sri Lankans**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Office ஆனது மொத்த எண்ணிக் கையை அண்ணளவாக கணக்கிடு வதற்காகவே ஒரு Formula இனை பாவிக்கின்றது. அதன்படி மொத்த தொகையை 2.6 இனால் பெருக்கிப் பார்க வேண்டும். இதன்படி மொத்த அகதிகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் என எடுத்துக் கொண்டு முடிவுக்கு வரலாம்.

கடந்த 20 வருட காலத்தில் Home Office மட்டத்திலான முதலாவது பரிசீலனையின் பின் நிராகரிக் கப்பட்ட விண்ணப்பங்கள் 27248 ஆகும். இவற்றிலே நீதிமன்ற, மேல் முறையீட்டு நீதிமன்ற விசார ணையின் பின்பும், 1996ம் ஆண் டும் இப்போதும் வழங்கப்பட்டுள்ள மன்னிப்பு அடிப்படையிலான நிரந் தர அனுமதி வழங்கப்பட்ட பின்பும் இப்போது மொத்தமாக இருப தாயிரம் நிராகரிக்கப்பட்ட தமிழ் அகதிகளும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களும் அதாவது 52000 தமிழர்கள் நிரந்தர இருப்பிட அனும தியின்றி இருக்கின்றார்கள் என்ற கணிப்புக்கு வரலாம்.

1983ம் ஆண்டு முதல் 1993ம் ஆண்டு வரையிலான காலப் பகுதி யில் இலங்கையர்களுக்கு மனிதா பிமான அடிப்படையில் இருப்பிட அனுமதி (Exceptional Leave to Remain - ELR) வழங்கப்பட்டு வந் துள்ளது. இக்காலப்பகுதியில் 15202 விண்ணப்பங்களை பரிசீலனை செய்த Home Office ஆனது 13121 விண்ணப்பதாரிகளுக்கும் அவர்களது குடும்பத்தினர்களுக்கும் ELR இனை வழங்கிபோதிலும் 132 விண்ணபதாரிகளுக்கு மாத் திரமே அகதி அந்தஸ்த்து (Refugee Status) வழங்கியிருந்தமை இங்கு

**"பிரித்தானியாவில் உள்ள தமிழ் அகதிகளின் எண்ணிக்கை ஒரு இலட் சத்து இருபத்தையாயிரம்"**

குறிப்பிடத் தக்கதாகும்.

1994 முதல் 2003ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் 30845 விண்ணப்பதாரிகளின் தஞ்சக் கோரிக்கைகள் Home Office இனால் பரிசீலனை செய்யப்பட்டு 26235 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட் டன. நீதிமன்ற மறுபரி சீலனையின் போது மேலும் 3500 விண்ணப் பதாரிகளின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிரந்தர வதிவிட அனுமதி வழங்கப்பட்டது.

1993ம் ஆண்டுக்கு முன்பு தஞ்சம்கோரி பரிசீலனைக்கு உட் படுத்தப்படாமல் Home Office இன் முடிவுகளுக்காக காத்திருந்த 4460 விண்ணப்பதாரிகளும் 1994ம் ஆண் டுக்கு பின்பு தஞ்சம் கோரி நிராக ரிக்கப்பட்டவர்களுமாக தற்போது மொத்தம் 10860 தமிழ் தஞ்சம் கோரியோரும் அவர்களுடைய குடும்பத்தினரும் பிரித்தானி யாவில் 10 வருடங்களுக்கு மேலாக அகதி அந்தஸ்த்து நிராகரிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வருகிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rahul
LONDON

Importers, Whole Salers & Retailers

Textiles, Stainless Steel Ittems, Fancy, Gifts & Toys
Video, Audio, CD, DVD, Sales & Rental

Swmeet
கிரைண்டர்
திருத்தவும், உருதிரிப்
பாகங்களுக்கும்
நாடுங்கள்

கதிரைகளை
வாடகைக்கு
பெற்றுக்
கொள்ளலாம்



**162B Mitcham Road**
**Tooting, London**
**SW17 9NJ**
**Tel & Fax: 020 8682 1010**

For Contact at Canada (416) 298 1598



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**TB** அதிக எண்ணிக்கையில் தமிழர்களது தஞ்ச விண்ணப்பங்கள் நிராகரிக்கப் பட்டதற்குரிய காரண ங்கள் என்னவென்று உங்களால் கூற முடியுமா?

**கே.எஸ்.நாதன்** இக்கேள்வியை நிரா கரிக்கப் பட்டவர்களினால் 10 வரு டங்களுக்கு முன்பு கேட்கப்பட்டி ருந்தால் உண்மையாகவே இன்று இப்படியொரு அவல நிலைக்கு தமிழ் அகதிகள் தள்ளப்பட்டு இருக் கமாட்டார்கள் என நான் நினைக் கிறேன்.

இங்கு தஞ்சம்கோரும் நடை முறையிலே தஞ்சம் கோரியவர், அவருக்காக பிரதிநிதித்துவம் செய்த சட்ட ஆலோசகர் அல்லது சட்டத் தரணி, விண்ணப்பத்தை பரிசீ லனை செய்த Home Office ஐ சேர்ந்த அதிகாரி ஆகிய மூவரும் பிரதான பங்கு பெறுகின்றனர். தஞ்சம் கோரியவர்கள் தனக்கு பிரதி நிதித்துவம் செய்த சட்டத்தரணியில் குற்றம் சுமத்துகிறார்கள். சட்டத் தரணிகளோ தஞ்சம் கோரியவர் களிலும், Home Office இலும் குற்றத்தை சுமத்துகின்றார்கள். Home Office ஆனது கூறுகிறது தங்களில் தவறுகள் இருந்திருந்தால் அதற்கு எதிராக நீதிமன்றத்தில் பரிகாரம் தேடுவதற்கு ஒவ்வொரு தஞ்சம் கோரியோருக்கும் உரிமை இருக்கிறது என்கிறது. எது எவ்வா றாக இருந்தாலும் இந்த விடயத்தில் மிகவும் ஆழமான ஆய்வு அவசிய மாகின்றது. யார் பொறுப் பாளி என்பதை கண்டறிவதற்காக மட்டு மில்லை, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் ஏதோ வகையில் கிடைக்க வேண்டும். இது தொடர் பான ஆய்வொன்றில் நான் பாதி வழி வந்துவிட்டேன். ஆய்வின் முடிவுகள் பகிரங்கமாக வெளியிடப் படும் வரை இந்தக் கேள்விக்கான விடையை காணுவதை இப்போது ஒத்தி வைப்போம்.

**TB** நீங்கள் தொடர்கின்ற ஆய்வுக்கு எவ்வாறு எமது வாசகர்கள் உதவ முடியும் என எதிர்பார்கிறீர்கள்?

**கே.எஸ்.நாதன்** நிச்சயம் பங்களிக்க முடியும். நிராகரிக்கப்பட்ட நிலை யில் இருக்கின்ற தமிழ் தஞ்சம் கோரியவர்கள் இந்த ஆய்வில் பங்கு கொள்ள விரும்பியோர் என்னுடன் தொடர்பு கொள்ளும்படி உங்கள் சஞ்சிகையூடாக இச் சந்தர்பத்திலே கேட்டுக்கொள்கின்றேன். *(பார்க்க பக்கம் 15)*

*நீங்களும் கேட்கலாம்*

*தஞ்சம் கோரிக்கை தொடர்பான உங்களது சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புவீர்களாயின் உங் களது கேள்விகளும் திரு கே.எஸ்.நாதன் அவர்களிடம் முன் வைக்கப்பட்டு அதற்கான பதில்கள் பெற்றுத்தரப்படும்.*
*ஆசிரியர்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SHARON

## தரமான உணவுப் பொருட்கள் மலிவான விலையில்

தெற்கு இலண்டனில் பல வருடகாலமாக இயங்கி வரும் Sharons நிறுவனம் தற்போது புதுப்பொலிவுடன் உங்களது அனைத்து தேவைகளுக்கும் இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பசுமையான மரக்கறிவகைகள், உங்களது திருமணம்,பூப்புனித நிராட்டு விழா போன்ற விசேஷ தினங்களுக்கும், கோயில் விசேஷங்களுக்கும் தேவையான வேப்பிலை, மாவிலை, வாழையிலை மற்றும் சமயக்கிரிகைகளுக்கு தேவையான அனைத்து கிரிகைப் பொருட்களையும் உங்களது தேவைக்கேற்ப தாயகத்தில் இருந்து பெற்றுத் தர காத்திருக்கிறோம்

Sharon
நல்லெண்ணெய்
£1.99

**மரக்கறி பழ வகைகள் அனைத்தும் சில்லறை வியாபாரிகளுக்கு விசேட விலையில்**

**020 8672 9353**




311-313
Mitcham Road
Tooting
London
SW17 9JQ






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த இதழில் வட்டி விதம் கூடும் பொழுது நீங்கள் எப்படி Re Mortgage செய்து பல நூறு பவுண்களை சேமிக்க முடியும் என்பதனை பார்த்திருந்தோம். இந்த

# கடன் சுமையை குறைக்க Re Mortgage செய்யலாமா?

இதழிலே நாம் பார்க்க இருப்பது எம்மவர்களில் பலர் இன்று வியாபார நிலையங்களை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் பெரும்பான்மையானோர் Leasehold Business இனை வாங்கி Bank of England இன் அடிப்படை (4.75%) வட்டி வீதத்தை விட 4% தொடக்கம் 5% வரை அதிகமாக வட்டியாக கட்டுகிறார்கள். இவர்கள் இவ்வியாபாரத்தின் மூலம் பெறக்கூடிய உண்மையான இலாபம் 12% - 15% மட்டுமே இதனால் வாடகை கூடும் போதும் அல்லது வியாபாரம் குறையும் போதும் வங்கியின் மாதாந்த தொகையினை கட்டுவதற்கு பல சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள். இவர்கள் தமது வீட்டின் 40% - 50% வீதமான Equity வைத்திருப்பார்கள் ஆனால் மிகவும் சுலபமாக Flexible Mortgage மூலம் இந்த Leasehold Business Loan ஐ மீளசெலுத்திய பின்பு வீட்டின் பெறுமதியின் 75% - 90% வரையிலான கடனை Flaxible Mortgage மூலமோ Cheque Book Facility மூலமோ தேவையான பொழுது பெற்று தேவையில்லாத போது செலுத்தி விடுவதன் மூலமும் உங்களது Out Standing Loan இற்கு




மட்டுமே வட்டி கட்ட வேண்டி இருக்கும். இந்த முறையினை நீங்கள் பின்பற்றினால் பல மடங்கு வட்டிக்காக செலுத்தும் தொகையினை சேமிப்பாக்க முடியும்.

இன்று எம்மில் பலர் பல்லாயிரக் கணக்கில் Credit Card, Loan என்பவற்றை பெற்று ஒரு புறம் மிகப் பெரிய கடனாளியாக இருப்பதுடன் மறுபுறத்திலே வீட்டின் பெயரிலே நிறைய Equity இனையும் வைத்துக் கொண்டு. விட்டிலை கைவைக் காதைங்கோ என்ற அன்பு மனைவியின் வேண்டுகோளையும் புறந் தள்ளமுடியாது அவதிப்படும் நிலையினை நான் அனுபவ வாயிலாகவே அறிந்தள்ளேன். இப்படியான சந்தர்பங்களில் நான் கூறும் அறிவுரை என்னவெனில் உங்களது மாதந்த கடன் செலவுகள் (Credit Card,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கடந்த பல வருடங்களாக கிழக்கு இலண்டன் மக்களின் தேவையினை பூர்த்தி செய்து ஆதரவைப் பெற்ற பிரபாஸ் தமிழ்க் கடை இப்பொழுது மேற்கு இலண்டனில் உள்ள Rayners Lane இல் வாகன தரிப்பிட வசதி, மற்றும் குளிரூட்டப்பட்ட வசதியுடன் தமது புதிய வியாபாரத்தை ஆரம்பித்துள்ளார்கள்.



உடன் இறைச்சி வகைகள்



விடியோக்கள்

இலங்கை இந்திய உணவுப்பொருட்கள் புதிதாக மரக்கறி வகைகளுக்கென குளிரூட்டப்பட்ட அறையில் உடன் மரக்கறி பழ வகைகள் கடலுணவு பொருட்கள் உடன் இறைச்சி வகைகள் குளிர்பான வகைகள் மதுபான வகைகள் தொலைபேசி அட்டைகள் இலங்கை இந்திய வாராந்த பத்திரிகைகள் சஞ்சிகைகள் மற்றும் புதிய பழைய திரைப்பட Audio CD, VCD, DVD என்பனவற்றை தரமானதாகவும் மலிவாகவும் மேற்கு இலண்டனில் ஓரே இடத்தில் பெற நீங்கள் விரைய வேண்டிய இடம் பிரபாஸ் தமிழ்க் கடை

**415, Alexandra Avenue**
**Rayners Lane, Harrow**
**HA2 9SG**

**Tel: 020 8866 0977**



உடன் மரக்கறி வகைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Loan, Private Loan) என்பற்றை மொத்தமாக கூட்டி ஒரு பக்கத்தில் போடுங்கள்.

உதாரணத்துக்கு மொத்தக் கடன் £40,000 என்றால் உங்களது மாதந்த கட்டுப்பணமாக £450 வரும் எனவும் எடுத்துகொள் வோம். இதே நேரத்தில் உங் களது வீட்டின் மேல் இன்னும் 100K க்கு Mortgage இருக்கிறது என்றும்




100K*6%/12 = £500 (மாதந்த வட்டி) +£450 (கடனுக்கான வட்டி) = £950 (மொத்த மாதந்த கொடுப்பனவு)

உங்கள் வீட்டின் மீது £40,000 பெறுமதிக்கு Re Mortgage செய்து கொண்டால்

140K*6%/12 = £700 (மாதந்த வட்டிமட்டும் செலுத்த நேரிடும்

ஆனால் வீட் டின் மதிப்பானது 200K எனவும் வைத்துக்கொள்வோம்.

இனி நீங்கள் மேற்கூறிய மொத்தக் கடனைக் மீளச்செலுத்துவதற்காக £40,000 களுக்கு Re Mortgage செய்து கொண்டால் £250 இனை மாதா ந்தம் சேமிக்க முடியும். எனவே மேற்கூறிப்பிட்ட உதாரண கணி ப்பிற்கேற்ப உங்களது கடன் தொ கை மீதமுள்ள Mortgage தொகை என்பனவற்றை ஒப்பிட்டுப் பார்த்து உங்களால் எவ்வளவு தொகை யான பணத்தை மாதாந்தம் சேமிக்க கூடியதாக இருக்க முடியும் என்ப தனை அறியலாம். இதைப்பற்றி நீங்கள் மேலதிக விபரங் களை பெற வேண்டுமாயின் என்னுடனோ அல்லது உங்களது Financial Advisor இடம் ஆலோ சனைகளை பெற்றுக் கொள்ளுங்கள்.

அடுத்து கடந்த சில வாரங் களாக பத்திரி கைகள், TV, Radio என்பவற்றில் வெளிவந்த விடயம் "House Price Melted Down" வீட்டு விலைபற்றி ஆராச்சி செய்யும் பல நிபுணர்களின் கணிப்பின் படி வீட்டின் விலை வீழ்ச்சியின் அடிப் படைக் காரணம் பல 1st Time Buyers வீட் டுச் சந்தைக்குள் (Housing Market) வருவதனை நிறுத்திக் கொண்டுள்ளனர். இவர் களது புறக்கணிப்பால் விலை தொ டர்பான ஒரு சங்கிலித் தொடர்பை (Chain) தொடங்க முடியாமல் உள்ளது. சில பொருளாதார நிபுணர் களின் கருத்தின் படி விலை கூடியாதக இருக்கும் வீடுகள் 20% வீதம் வரை குறைவதற்கான அறி குறிகள் உள்ளதாக கூறுகிறார்கள்.

கடந்த இரண்டு வருடங்களில் 30%

M.வைகுந்தவாசன்
MLIA (Diploma),MAQ(Cii)
Tel:020 8543 8484


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதமான 1st Time Buyers இன் அளவு குறைந்துள்ளது எனவும் கூறுகிறார்கள். இத்தகைய குறை வான வருகையானது 40%–50% வரை வீட்டுச் சந்தையின் விலை யை பாதிக்கின்றது. IMF எனப் படும் Internati onal Marketing Fund கூட கூடியளவு விலை வீழ்ச்சியை வீட்டுச் சந்தையானது எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்ற எதிர்பார்பை அறிவித்துள்ளது.

புதிதாக வீட்டினை கட்டுபவர்கள் (Builders) கூட தமது இலாபம் வீழ்ச்சியை எதிர்நோக்கின்றது என அறிவித்துள்ளனர். இப்படியான எல் லோரது எச்சரிக்கை அறிவிப்புக ளும் ஒரு வகைக்கு விலை வீழ்ச் சியைக் கொடுத்தாலும் பாரிய விலை வீழ்ச்சிக்கு கொண்டு செல் லாது என பலர் எதிர்பார்க்கிறார்கள்.

Capital Economics என்பபடும் பொருளாதார நிபுணர்களின் கணி ப்பின் படி 1/5 என்ற அடிப்ப




டையில் விலையானது வீழ்ச்சியை எதிர்நோக்கலாம் என கூறுகின் றனர். பல பொருளாதார நிபுணர் களின் கருத்தின்படி நவம்பர் மாதத் தில் 0.25% இனால் வட்டிவீதம் அதிகரிக்கப்படலாம் இதன்படி Bank of England வட்டி வீதம் 5% அதி கரிக்கப் படுவதற்கான வாய்புகள் இருக்கின்றது என்றும் இதன் பின் வட்டிவீதம் அதிகரிப் பதற்கான வாய்புகள் இருக்காது என பலரும் நினைக்கிறார்கள். இவ்வாறு பார்த் தால் Mortgage Rate SVR 7% வீதத் திற்கு அதிகரிக்கப்படும். எனவே இத்தகைய நிலமை வருவதற்கு முன்னர் Re Mortgage மற்றும் Business Loan என்பவற்றை உங்களது கட்டுப்பாட்டுக்குள் வைப் பதனால் பல மடங்கு பணத்தினை சேமிக்க முடியும் என நான் கருது கிறேன். எனவே Re Mortgage செய்ய விருப்பம் எனின் உங்களது Financial Advisor ஐ கலந்தா

## பரிசீலனையில்

வாசீசன் டிக்ஸ் வேள்ட் உடன் இணைந்து நாம் நிகழ்த்திய போட்டிக்கு பல வாசகர்கள் தமது பதில்களை அனுப்பி உள்ளார்கள் அவர்களுடைய பதில்கள் எமது ஆசிரியர் குழுவினால் பசிலீக்கப்பட்டு வருகின்றது.

போட்டிக்காக கேட்கப்பட்ட கேள்விக் குரிய பதிலும், பரிசுக்குரிய அதிஷ்ட சாலியின் பெயரும் அடுத்த இதழிலே அறிவிக்கப்படும்.

ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கீழே உள்ள கேள்விக்கு சரியான விடை எழுதும் வாசகர்களில் அதிஸ்ட சாலி ஒருவரை குலுக்கல் முறையில் தெரிவு செய்து சில்க் எம்போறியம் வழங்கும் பட்டுச் சேலையை பரிசாக தர காத்திருக்கிறோம்.
உங்கள் முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன் பதிலை குறிப்பிட்ட திகதிக்கு **(5.12..2004)** முன்னர் எழுதி அனுப்புங்கள்.

**போட்டி இல 06** **உங்களுக்கான கேள்வி**

*புதிய வரவு செலவு திட்டத்தின் படி £250 பெறுமதியான Voucher ஐ அரசாங்கம் வழங்க இருக்கின்ற கொடுப்பனவு எது?*

**Tamil Business P.O.Box 716**
**Wembley HA0 3WL**

**வாழ்வில் வசந்தம் வீச உங்கள் தெரிவுகளுக்கு**

| Western Jewellers | Silk Emporium | Westen Jewellers |
|---|---|---|
| 230 Upper Tooting Road | 122 Upper Tooting RD | 29-25 EalingRoad |
| London, SW17 7EW | London, SW177EN | Wembley, HA0 4YA |
| Tel:020 8767 3445 | Tel:020 8672 1900 | Tel:020 8903 0909 |



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு உதவ உதவுங்கள்

அகதிகள் பணியகத்தைச் சேர்ந்த (BRC) திரு.கே.எஸ்.நாதன் அவர்களால் கிழக்கு இலண்டன் பல்கலைக் கழகத்தின் (University of East London) அனுசரணையுடன் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்டவர்கள் தொடர்பான பின்வரும் விடயங்களில் ஆய்வு ஒன்று செய்யப்படவிருக்கின்றது.

தஞ்சம் கோருவதற்கு முன்பும் பின்பும் தஞ்சம் கோரிக்கை தொடர்பாக கிடைக்கக்கூடிய சகல வழிகாட்டல்கள், சட்ட ஆலோசணைகள், என்பன தேவைக்கு உரிய தரத்தில் (Required Standard) தடையின்றி கிடைத்தனவா?

அதிக எண்ணிக்கையில் தஞ்சக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டதற்கும் – நிராகரிக்கப்பட்டவர்கள் நீண்ட காலம் இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டதற்கும் காரணமானவர்கள் யார்?

நீண்ட காலமாக இருப்பவர்கள் இந்நாட்டில் நிரந்தர வாழ்க்கையை தொடர்வதற்காக தங்களை ஸ்திரப்படுத்திக் கொண்டு பிரித்தானியா சமூகத்திற்கு பங்களிப்பு செய்கிறார்களா? அல்லது தற்காலிகமாக நாட்டுக்கு திரும்புவதற்காக ஒதுங்கி வாழ்ந்து கொண்டிருக்கிறார்களா?

நீண்டகாலம் இந்த நாட்டில் இருந்தவர்களை பலவந்தமாக நாடுகடத்துவது சர்வதேச, உள்நாட்டு மனித உரிமைகளுக்கு அல்லது மனிதாபிமான விதிகளுக்கு முரண்பட்டவையா?

தஞ்சம் கோரியவர்கள் இந்த நாட்டு குடி வரவுச் சட்டங்களின் படி சட்டவிரோத குடி வரவாலர்களா? (Illegal Immigrants)
இவைபோன்ற முக்கிய கேள்விகளுக்கான விடைகள் ஆய்வு மூலம் அறியப்படும்.

இந்த ஆய்வின் போது நிராகரிக்கப்பட்ட தஞ்சம் கோரியோர், சட்டத்துறையைச் சேர்ந்தவர்கள், சமூக நிறுவனங்கள், குடிவரப்பகுதி அதிகாரிகள், தனிப்பட்டவர்கள் போன்றோரிடம் இருந்து ஆய்வுக்குரிய தரவுகள் பெறப்படும்.

ஆய்வின் முடிவுகள் கிழக்கு இலண்டன் பல்கலைக்கழகத்தினால் உத்தியோக ஆய்வு அறிக்கையாக வெளியிடப்படும்.

இந்த ஆய்வில் கலந்து கொள்ள முன்வர விரம்புபவர்கள் தொடர்புகொள்ளவும். ஏழு வருடங்களுக்கு மேலாக நிராகரிக்கப்பட்ட நிலையில் இருப்பவர்கள் முக்கியமாக இந்த ஆய்வில் கலந்து கொள்ளும் படி அன்புடன் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். இலங்கைக்கு திருப்பியனுப் பட்டவர்களின் தகவல்களை தரக்கூடிய உறவினர்கள் நண்பர்களும் தொடர்பு கொண்டால் உதவியாக இருக்கும்.

இந்த ஆய்வில் கலந்து கொள்பவர்களது தகவல்களை இந்த நாட்டு Data Protection Act க்கு உட்பட்ட வகையில் அந்தரங்கமாக பாதுகாக்கப்படுவது மாத்திரமன்றி ஆய்வுகளிலும் உங்களது பெயர்கள் வெளியிடப் படமாட்டாது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

**மேலதிக தொடர்புகளுக்கு**
**திரு.கே.எஸ்.நாதன்**
**0790 028 6811**
மாலை 7மணி முதல் 10 மணி வரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐபிசி தமிழ் வானொலியில் கடந்த மாதம் ஒரு காலைப்பொழுது இடம்பெற்ற நூலியல் தகவல் என்ற நிகழ்ச்சியில் எமது சஞ்சிகை பற்றி நூலகர் திரு என். செல்வராஜா அவர்களது விமர்சனத்தின் வடிவில் அமைந்ததாக, அவர்களது விற்பனைப்பொருட்களை அறிவுபூர்வமாக நுகர்வோர்களான வாசகர்களின் முன்வைப்பதாக இந்த விளம்பரங்கள் அமைந்துள்ளன.

# ஐபிசி இல் இடம்பெற்ற நூல் விமர்சனம்

சுருக்கத்தை எமது வாசகர்களுக்கு தருகிறோம்.

இலவச மாதந்த வணிகச் சஞ்சிகையாக இலண்டனில் இருந்து கண்கவர் வண்ணக் கலவையில் தரமான வழுவழுப்பான தாளில் அச்சிடப்பட்டு வெளிவரும் இந்த வர்த்தகச் சஞ்சிகையின் 13வது இதழ் ஒக்டோபர் 2004க்குரியதாக மலர்ந்துள்ளது.

சஞ்சிகை வெளியீடு என்றதும் எமது பார்வைக்கு வருபவை பெரும்பாலும் சமயச் சஞ்சிகைகளும், கலை இலக்கியச் சஞ்சிகைகளேயாகும். வர்த்தக விளம்பரங்கள் அவற்றின் அச்சாக்ககத்துக்கு தேவையான கணிசமான வருவாயைத் தருகின்ற காரணத்தால் சஞ்சிகைகளில் ஏனோ தானோ என்று இடம்பிடித்துக் கொள்கின்றன. தமிழ் வணிகம் என்ற இந்த மாத சஞ்சிகையில் முத்திரை பதிப்பாக நான் கருதுவது என்னவெனில் இந்த சஞ்சிகையில் இடம்பெற்றுள்ள வர்த்தக விளம்பரங்களாகும். இதிலுள்ள விளம்பரங்கள் சஞ்சிகை வெளியீட்டுக்கான வருவாய்க்காக மட்டும் காணப்படவில்லை சிறு கட்டுரை தனித்தமிழ்க் கொள்கையிலிருந்து விலகி தமிழ் ஆங்கிலக் கலப்பில் கட்டுரைகள் அமைந்திருப்பது மனதை நெருடுவதாக அமைந்திருந்த போதிலும் இந்தச் சஞ்சிகையின் நோக்கம் தமிழ் வளர்ப்பதோ இலக்கியம் வளர்ப்பதோ எழுத்தாளர்களை ஊக்கிவிப்பதோ அல்ல என்ற அடிப்படை உண்மையை மனதில் நிறுத்திக்கொள்ள வேண்டும். தமிழ் வணிகம் இதழில் இடம்பெறும் கட்டுரைகள் யாவுமே அவ்வத் துறைகளில் அனுபவபூர்வமாக ஈடுபட்டுவருவோரினால் ஏழுதப்பட்டவை துறைசார் தகவல்களை அவர்கள் கட்டுரை வடிவில் தந்திருக்கிறார்கள். இதில் எழுதியவர்கள் தமிழ்ப் புலமை பெற்றவர்களோ எழுதும் ஆற்றல் கைவந்த இலக்கியவாதிகளோ அல்ல என்ற உண்மையும் இங்கு கவனிக்கப்படவேண்டும். தாம் அறிந்த துறைசார் தகவல்களை நுகர்வோருக்கு வழங்குவதே இக்கட்டுரையாளர்களின் தலையாய பணியாகக் கருதப்பட்டுள்ளது

என தொடர்ந்து செல்கின்றது திரு என் செல்வராஜா அவர்களுடைய விமர்சனம்.




e-mail: info@oriolesys.com
tel: 07989658909

OrioleSys.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Letter

**மதிப்புக்குரிய தமிழ் வணிகம் ஆசிரியருக்கு**

பல பயன் தரக்கூடிய கட்டுரைகளை வெளியிடுகிறீர்கள் என்னுடைய மானசீகமான பாராட்டுக்கள். இன்றை இளைய இளைய தலைமுறையினருக்கு பலன் தரக்கூடிய ஆக்கங்களை எழுதி அனுப்பினால் பிரசுரிப்பீர்களா? உங்களிடம் இருந்து பதிலை எதிர்பார்க்கும்.

**வன்னி பிரகாஷ்**
**Manor Park**

*ஆசிரியர்: உங்களது கடிதத்துக்கு முதலில் நன்றிகள். தங்களது ஆக்கங்கள் பயனுள்ளவை என ஆசிரியர் குழு கருதுமிடத்து அவை நிச்சயமாக பிரசுரிக்கப்படும். உங்களது ஆக்கத்துடன் உங்களது முகவரி தொலைபேசி இலக்கத்தினையும் இணைத்து அனுப்புங்கள்.*

---

**ஆசிரியருக்கு வணக்கம்**

தங்களின் கைவண்ணத்தில் வெளிவரும் சஞ்சிகையானது மிகவும் தரமுள்ளதாகவும், வர்த்தகம் சம்பந்தமான தகவல்கள் பலவற்றையும் தருவதனால் இச் சஞ்சிகையை நான் விரும்பி வாசிப்பதுண்டு. இச் சஞ்சிகை இன்னும் பல ஆக்கங்களை உள்ளடக்கி நாம் அறியாத பல நடைமுறை விடயங்களை வெளியிட வேண்டும் என வேண்டிக்கொள்கிறேன்.

**S. விஜியா**
**Croydon**

---


**அன்புள்ள ஆசிரியருக்கு**

தமிழ் வணிகம் சஞ்சிகையை தவறாது வாசித்து வரும் வாசகர்களுள் நானும் ஒருவர். என்போன்ற வயதுபோனவர்களுக்கு உபயோகமான பல விடயங்களை எழுதிவருகிறீர்கள் வாழ்த்துக்கள்.

**திருமதி புவனம் தர்மரட்னம்.**


---

கடந்த இதழில் நடைபெற்ற அதிஷ்டப் போட்டியில் கேட்கப்பட்ட கேள்விக்கு என்ற பதிலை அனைவருமே சரியாக குறிப்பிட்டிருந்தார்கள். எனினும் அவர்களில் குலுக்கல் முறையில் பட்டுச் சேலை பரிசுக்கு தெரிவான அதிஷ்டசாலி திருமதி சண்முகப்பிரியா வேலுமணி அவர்களுடைய கடிதம் அருகில்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Business City**



MILTON KEYNES

# தொழில் நகரம்
## Milton Keynes

தொழில் நகரம் என்ற தலையங்கத்தின் கீழ் நாம் எழுத தொடங்கிய காலத்தில் இருந்து பல வாசகர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு தமக்கு ஒரு தொழில் (வேறென்ன கடைதான்) பார்த்து சொல்லுமாறு அன்பு வேண்டு கோள் வைக்கிறார்கள். உண்மையாகவே இக்கட்டுரையுடான எமது நோக்கம் ஒவ்வொரு நகர் பற்றியும் தகவல்களை தருவது தான். அவ் நகரில் நீங்கள் தொழில் தொடங்க போகிறீர்கள் எனின் அந்த அந்த நகரில் உள்ள Estate Agents அல்லது Propery NewsPapers போன்றவற்றின் ஊடாக தகவல்களை பெற்று ஒன்றுக்கு இரண்டு முறை ஆலோசித்து தொழிலை ஆரம்பிக்குமாறு தாழ்மையாக கேட்டுக் கொள்கின்றோம்.

இவ் இதழிலே உங்கள் அனைவரையும் நாம் அழைத்துச் செல்வது Milton Keynes நகருக்கு. Milton Keynes என்ற நகரை தெரிவு செய்தவுடன் அந்த நகரைப்பற்றி எத்தகைய விடயங்களை எழுதுவது என்ற பெரிய சந்தேகமாக இருந்தது. ஆனாலும் சற்று ஆழமாகவும் நிதானமாகவும் இன் நகர் பற்றி ஆராய்ந்த போது நல்ல பல விடயங்களை அறிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது.

முதலிலே இந் நகரம் எங்கு அமைந்துள்ளது என்பதனை நோக்குவோமாயின் லண்டனில் இருந்தும் Birmingham நகரில் இருந்தும் சரி அரைவாசித்துரத்திலே அமைந்துள்ளது. இதனால் இவ் நகரிலுள்ள மக்கள் இலகுவாக இலண்டன் சென்று வரகூடியதாக இருப்பதுடன் Benfordshire, Northamption Shire, Buckingham Shire முதலிய County களை இணைத்து நிற்கிறது இவ்நகரம். இவ் நகரில் உள்ள குடிசனத் தொகையானது வருடத்திற்கு 3000 ஆக அதிகரிப்பதனால் தற்போது 200,000 வரை எட்டி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Business city**




யுள்ளது.

Milton Keynes அதிகளவான மக்கள் தொகையை கொண்டுள்ள நகருக்கு இப் பெயர்வர காரணம் என்ன வென்பதனை பார்போமாயின். ஆரம்பகாலத்திலே Milton Friedman உம் John Maynard Keynes என்ற இரு பெரும் பொருளாதார நிபுனர்கள் வாழ்ந்ததாகவும் இவர்களது குடும்பம், மற்றும் உறவினர்களே பெரும்பான்மையாக இவ் நகரில் வாழ்ந்ததாகவும் சரித்திர ஆய்வுகள் கூறுவதுடன். இங்குள்ள பொது மக்கள் ஒன்று கூடும் இடங்கள் Milton Friedman க்கும் John Maynard Keyne க்கும் உரிய பங்களாவிற்கு இடையில் அமைந்ததனால் காலப்போக்கிலே அந்த இடம் Milton Keynes என்று மருவியதாகவும் காரணங்கள் கூறப்படுகின்றன. தற்போது இன் நகரம் சீரமகைக்கப்பட்டு புது பொலிவுடன் காணப்படுவதனால் இதனுடைய வரலாற்றை பலர் அறிந்திருக்க சாத்தியமில்லை.



Milton Keynes நகரம் பிரித்தானியாவில் உள்ள பல ஆராட்ச்சி மையங்கள் இயங்குகின்ற பெரும் நகரமாக காணப்படுகிறது. இன்றும் கூட இன் நகர் பற்றிய ஆராட்ச்சிகள் இடம் பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. இன் நகரில் நடைபெற்ற ஆராட்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்ட 150 மில்லியன் ஆண்டுக்கு முற்பட்ட ஆற்றுப்பள்ளத்தாக்கும் அதில் காணப்பட்ட நுன்னுயிர்களின் கட்டமைப்பு படிவங்களும் இன்னமும் புதைபொருள் ஆராட்ச்சியாளர்களால் கண்டுபிடிக்க முடியாத புரியாத புதிராகவே காணப்படுகிறது.


அதுமாத்திரமன்றி இவ் நகரில் ஆதிமனிதன் பாவித்த பல ஆயுதங்கள் குறிப்பாக கோடரி போன்ற வடிவமைப்பையுடைய ஆயுதம் மற்றும் அவர்கள் உபயோகித்த ஆபரணங்கள் என்பன கண்டு பிடிக்கப்பட்டமையானது ஆராட்ச்சியாளர்களின் தேடலை அதிகரித்துள்ளது.

இப்படியான புராதன நகராகிய Milton Keynes நகரம் தற்போதைய நவீன காலத்துக்கு ஏற்ப வடிவமைக்கப் பட்டுள்ளதுடன் நாகரிகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதாரம், கல்வி அறிவு என்ப வற்றிலும் மேலோங்கி பிரித்தானிய நகரங்களில் மிக முக்கிய பொரு ளாதார நகரமாக காணப்படுகின்றது.



இன் றைய கணக்கெடுப்பின் படி இந்த நகரில் இருந்து வெளியேறு பவர்களை காட்டிலும் உள்வருப வர்களது எண்ணிக்கை கணிசமான அளவு கூடவாகவே உள்ளது. நகரினது மையப்பகுதிகள் சிறிதாக உள்ளபோதும் இன்றை அமெரிக்க நகரங்களை போல் அனைத்து வசதியுடன் கூடியவாறு வடிவமைக் கப்பட்டுள்ளது சிறப்பாகும்.

இந்த நகரிலே விண்வெளி ஆரா ய்ச்சி மையம் அமைப்பதற்குரிய ஒழு ங்குகள் செய்யப்பட்டு சில காரணங் களால் அத்திட்டம் கிடப்பில் போட ப்பட்டுள்ளது. இத் திட்டம் மாத்திரம் நிறைவேறுமானால் நகரினது பொரு ளாதாரமானது வளர்ச்சி அடையும். அத்துடன் இன் நகரைச்சுற்றி 4000 ஏக்கர் நிலப்பரப்பு காடுகளாக காணப்படுவ தனால் எதிர் காலத்தில் இக்காடுகள் அழிக்கப் பட்டு புதிய புதிய தொழில் நிறு வனங்கள் வருவதற்கான சாத்தியக் கூறுகளும் காணப்படுகின்றது.

இப்படியான பல வசதிகளையுடைய Milton Keynes நகரில் தற்போதைய மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி தனிப்பட்டவர்களாக இருப்ப வர்கள் 47692 பேரும், திருமணம் முடித்து குடும்பமாக வாழ்பவர்கள் 82914 பேரும், தனித்து வாழ்கின்ற தாய்மார்கள் 19645 பேரும், விதவை களாக வாழ்வோர் 9376 பேரும் என்று தகவல்கள் கூறுகின்றன. இவர்களில் 37066 பேர் வீட்டுடன் கூடிய வாகனவசதியுடன் வாழ் கிறார்கள் எனவும் தரவுகள் கூறுகின்றன.

Milton Keynes நகரிலே பல்லின மக்கள் வாழ்கிறார்கள் குறிப்பாக வெள்ளை இனத்தவர் 187852 பேரும், இந்தியர்கள் 3967 பேரும், ஆபிரிக்க இனத்தவர் 2596 பேரும் என்று கணக்கெடுப்புகள் கூறுகின்து இவர்களிலே பெரும்பாலானவர்கள் வேலை செய்பவர்களாகவும் (104496 பேர்) மிக குறைவானவர்களே வேலை யற்றவர்களாகவும் (4443 பேர்) இருக்கிறார்கள்.

இப்படியான சிறப்புகளை உடைய 187852 நகரிலே நீங்களும் உங்களது தொழிலினை தொடங்க கூடியதாக இருக்கும் என்பது எமது அபிப்பிராயமாகும். முடிவெடுக்க வேண்டியது உங்கள் பொறுப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Vahizan Disc World

VMPV VIDEO

**WWW.VAHIZAN.COM**

**Get up to 10% off !!!** **From our online shopping!!!**

# வாகீசன் டிஸ்க் வேள்ட்



எம்மிடம் மிகப் பழைய காலத்து படங்கள் தொடக்கம் இன்றுவரையுள்ள வீடியோ பிரதிகள், வீடியோ சீடிகள், டிவிடிகள் என்பன வாடகைக்கு அல்லது மிகக்குறைந்த விலையில் சில்லறையாகவோ அல்லது மொத்தமாகவோ விற்பனைக்குண்டு.

இவற்றை விட சகலவிதமான பக்திப்பாடல்கள், கர்னாடகப்பாடல்கள், கர்னாடகவார்த்தியஇசைகள் யாவும் **MP3, AUDIO CD, CASSETTE** ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளலாம்.

WE SELL TITLES FROM INRECO, GEETHANJALI, VEDU, RPG, AMUDAM AND FROM MANY OTHER FAMOUS COMPANIES!



**Vahizan Disc World**
**52B Ealing Road, Wembley**
**Tel: 020 8902 8828**
**Email : Info@Vahizan.com**
**sales@vahizan.com**





**Vmpv Video Ltd**
**537 High Road, Wembley**
**Tel:020 8902 5055**
**Email:Sales@vahizan.com**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




YALLSEA
யாழினி

யாழின

இன்றைய கா
தரத்துடனும் க
படுத்துகின்ற
சந்தைகள் அ
யாழினி பிரான்
வத்தல், கட்டை
யத்திறகேற்ப த
நல்லெண்ணெய்
கடைகளிலுமே
கூடியதாக உள்

J&K Group
Unit 10, Kimpton Business Centre
Minden Road, Sutton, Surrey
SM3 9PF, England.

Te
Fa




வாசகர்கள், வர்த்தகர்கள், கட்டுரையாளர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Stock Market

# Stock Market

(பாகம் 2)

கடந்த மாத இதழிலே பங்குச் சந்தையில் (Stock Market) பங்கு களை வாங்கி விற்கும் முக்கியமான மூன்று முறைகளையும் சுருக்கமா கூறி அதில் பரப்பு பந்தயம் (Spread Bet) முறையானது வருமான வரிச் சலுகை (Tax Exemption) உள்ள தனால் இம் முறையை சிறந்த முறையாக தெரிவு செய்தோம்.



எனவே இந்த இதழி லே பரப்பு பந்தயம் (Spread Bet) முறை யைப் பற்றி சற்று விப ரமாக பார்போம். இந்த முறை மூலம் பங்கு களை (Shares) மட்டு மன்றி பணம் (Currencies), Gold, Crude Oil என்பவற் றையும் அதன் எதிர் கால (Future) விலைகளையும் சரியாக நிர்ணயித்து (Predict) வாங்கி விற்பதன் மூலம் இலாபம் அடை யலாம்.

பங்குகளை எவ்வாறு வாங்கி விற்பது என்பது எல்லோருக்குமே தெரிந்த ஒரு முறை என்பதனால் இந்த இதழில் பணங்களை (Currencies) Spread Bet முறையை பாவித்து வாங்கி எவ்வாறு இலாபம் பெறலாம் என பார்போம்.

உதாரணமாக Sterling Pounds(£), Dollar($) ஆகிய இந்த இரண்டு பணத்திற்கும் இடையிலான நாண யமாற்றால் ஏற்படும் (Exchange Rate) வித்தியாசத்தை எங்களுக்கு சாத கமாக பயன்படுத்தி இலாபம் அடையலாம்.

கடந்த இதழில் குறிப்பிட்டது போல் முதலில் வாங்கி பின்னர் விற்பனை செய் வது மட்டுமன்றி முதலில் விற்ப னை செய்து பின் னர் வாங்குவதன் மூலமும் பணங் களில் இலாபம் பெறலாம்.

இந்த இதழில் Sterling Pounds(£) / Dollar($) ஆகிய இந்த இரண்டு பணங்களையும் August 2003 முதல் Septmber 2004 வரையான காலப் பகுதியில் ஏற்பட்ட மாற்றத்தினை அருகில் உள்ள வரைபடம் (Graph) மூலம் இலகுவாக விளங்கிக் கொள்ளலாம்.

இக்கட்டுரையை எழுதும் இந்த நேரத்தில் Sterling Pounds(£) / Dollar(S) Rate ஆனது 18000 ஆக இருந்தது. இன்னும் மூன்று மாதங் களின் பின்பு Sterling Pounds(£) / Dollar(S) 18000 ஐ விட கூடும் என நீங்கள் நினைத்தால் இன்று அத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானம்பாடி இசைக்குழு

நவராத்திரி விசேஷத்தின் போது வோல்தம்ஸ்ரோ மேல்மருத்தூர் ஆதி பராசக்தி ஆலயத்தில் ஈழ நல்லூர் அருணா இசைக்குழுவினருடன் வானம் பாடி இசைக்குழுவினராகிய நாம் இணைந்து நடாத்திய இசை நிகழ்ச்சிக்கு மக்களின் அமோக ஆதரகிடைத்த எம்மை உங்களுடைய அனைத்துவித மங்களகரமான நிகழ்ச்சிகளையும், மேடைநிகழ்ச்சிகளையும் மிகமிக சிறப்பாக நடத்த இலண்டன் மேடைநிகழ்ச்சிகளிலும், தொலைக்காட்சிகளிலும் அப்துல்ஹமீது, கங்கை அமரன் ஆகியோரால் பாராட்டுப்பெற்ற கௌசல்யனும் அவரது நண்பர்களும் இணைந்த ஒரு இசைக்குழு.



அழைத்து மகிழுங்கள்

P.Kowsalyan
07903 652581



# SKY WINGS LTD
TRAVEL AGENTS

ANNIVERSARY 10th

SriLankan

Specialists For
USA - CARIBBEAN - CANADA
AFRICA - ASIA - MIDDLE EAST
FAR EAST - AUSTRALIA - EUROPE

Main Agents For
- Sri Lankan Air Lines
- Qatar Airways
- Royal Jordanian
- Garuda Indonesia
- Air India
- Egypt Air

QATAR AIRWAY

Garuda Indonesia



Tel : 020 8672 9111

119 Tooting High Street
London SW17 0SY
Tel : 020 8672 9111 Fax : 020 8672 0951 Mob : 07850 876 921
email : bala@skywings.co.uk web : www.skywings.co.uk

5766 PROTECTED

EGYPT AIR




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## Stock Market

னை வாங்கி பின்னர் மூன்று மாதத்துக்குள் விற்கலாம். இதற்கு மாறாக இன்னும் மூன்று மாதத்தில் 18000 ஐ விட குறையும் என எதிர் பார்த்தால். இன்று அதனை விற்று பின்னர் மூன்று மாதத்திற்குள் வாங்கலாம். எதிர்கால விலைகளின் ஏற்ற தாழ்வுகளை எவ்வளவு சரியாக (Accurate) நிர்ணயிக்கிறோம் (Prediction) என்பதை பொறுத்து தான் இலாபமா? நட்டமா? என்பது தங்கியுள்ளது.

Spread Bet முறையில் Points கணக்கில்தான் பணங்கள் வாங்கலாம். அதாவது 1 Points வாங்கினால் Sterling Pounds(£) / Dollar($) ஒவ்வொரு Points கூடும் போதும் £1 இலாபம் கிடைக்கும். 5 Points வாங்கினால் Sterling Pounds(£) / Dollar($) ஒவ்வொரு Points கூடும் போதும் £5 இலாபம் கிடைக்கும்.

கீழே உள்ள வரைபடத்தின் படி September 2003 Sterling Pounds(£) / Dollar($) 15800 ஆக இருந்து பின்னர் January 2004 இல் 18500 ஆக உயர்ந்தது. இந்த நான்கு மாத காலத்திக்குள் 2700 Points கூடியுள்ளது.

இதன் படி September 2003 இல் 1 Points வாங்கியிருந்தால் January 2004 இல் உங்களுக்கு £2700 இலாபம் கிடைத்திருக்கும். அதே போல் September 2003 இல் 5 Points வாங்கியிருந்தால் January 2004 இல் உங்களுக்கு £13500 இலாபம் கிடைத்திருக்கும். (18500 - 15800 = 2700*5 = £13500) இந்த இலாபத்திற்கு வரி விலக்குண்டு. (No Tax to Pay)




D.Raguraj
email:invest.raju@btinternet.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து முதலில் பணத்தை விற்று பின்னர் வாங்குவதன் மூலம் எவ்வாறு இலாபம் அடையலாம்




என பார்ப்போம். March 2004 இல் Sterling Pounds(£) / Dollar($) Rate 18800 ஆக இருந்தது அன்று March 2004 க்கும் June 2004 க்கும் இடையில் Sterling Pounds(£) / Dollar($) Rate 18800 ஐ விட குறையும் என நீங்கள் எதிர்பார்த் திருந்தால் March 2004 இல் நீங்கள் 5 Points ஐ விற்று பின்னர் June 2004 இல் 17600 க்கு வாங்கி இருந் தால் உங்களுக்கு £6000 இலாபம் கிடைத்திருக்கும்.
(18800 - 17600 = 1200*5 = £6000)

Sterling Pounds(£) , Dollar($) போல் மற்றைய நாட்டு பணங்களையும் வாங்கி விற்கலாம் உதாரணமாக Euro/Dollar, Yen/Dollar, Australian Dollar/US Dollar, Canadian Dollar/US Dollar

தரகர்கள் (Brokers) மூலம் நீங்கள் பணங்களை வாங்கி விற்கலாம். தரகர்களை தெரிவு செய்வதிலும் மிகுந்த கவனம் தேவை. சில தரகர்களிடம் £40 Deposit கொடுத்து 1 Points வாங்கலாம். மேலே உள்ள உதாரணத்தின் படி September 2003 இல் £200 கொடுத்து 5 Points வாங்கி அதை January 2004 இல் விற்று இருந்தால் உங்களது £200 Deposit க்கு £13500 கிடைத்திருக்கும்.

தரகர்களை பற்றிய விபரங்களை அறிய விரும்பினால் என்னுடைய மின்அஞ்சல் (Email) முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். மேலும் (Commodity) அதாவது (Oil) எவ்வாறு வாங்கி விற்கலாம் எனப்தனை அடுத்த இதழில் பார்போம்.

### எச்சரிக்கை

*Spread Bet என்பது மிகுந்த சவாலானது (Risky) என்பதால் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும். இந்த கட்டுரை Currency Spreadbet என்பது எப்படி நடைமுறையில் உள்ளது என்பதனை விளங்கப் படுத்துவது மட்டுமே. இந்தக் கட்டுரையை பாவித்து எவராவது நட்டம் அடைந்தால் அதற்கு ஆசிரியர் பொறுப்பல்ல.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு மயில்களின் அன்ன நடை



நாங்கள் எமது கலாச்சார விழுமியங்களுக்கு கட்டுப்பட்டு வாழ்ந்து வந்தாலும் "ரோமில் ரோமனாகஇரு" என்ற முதுமொழிக்கிணங்க இன்றை சூழ்நிலையில் நாம் புலம்பெயர்ந்த நாடுகளிலே அந்த நாட்டின் நாகரிகத்துக்கேற்பவே எமது வர்த்தகத்தினை விருத்தி செய்ய வேண்டியதாகவுள்ளது.

அந்த வகையிலே ஆடைகளை வடிவமைக்கின்ற தொழிலை நடாத்திவருகின்ற திருமதி நிரோ சிவகுமார் அவர்களால் நிர்வகிக்கப்படுகின்ற Barogue UK நிறுவனம் பல வகையான ஆடை களை புதிய புதிய வடிவமைப் பிலே உருவாக்கி வருகின்றன.

## Fashion Show

மேலைத்தேயத்திலே புதிய வகையான ஆடைகளை அறிமுகப் படுத்துவதற்காக ஆடைகளின் அணிவகுப்பு கண்காட்சி (Fashion Show) நடாத்துவதனை நீங்கள் அறிந்திருப் பீர்கள். அதே போன்றே Barogue UK நிறுவனமும் கடந்த மாதம் முப்பதாம் திகதி நடாத்திய Fashion Show இல் இருந்த சில ஆடைகளை உங்கள் முன் விரிக்கின்றோம்.

இந்த Barogue UK 2004 Fashion Show இலே ஆடைகளின் வடிவமைப்புக்கேற்ப பல வேறுபட்ட தொகுப்புகளாக அணிவகுக்கப் பட்டன. அதுமாத்திரமன்றி இடை இடையே நிகழ்வுக்கேற்ப இந்தியாவின் Bollybood கலைஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களால் நிகழ்த்தப்பட்ட இசை நடனமும் பார்வையாளர்களை சலிப் புக்கொள்ளாமல் செய்ய நல்லஒரு விடயமாக அமைந்திருந்தது.

ஆடைகளின் அணிவகுப்பிலே இந்தியாவின் Bollybood அழகுப் பெண்கள் ஆசிய பாரம்பரியத் திற்கு ஏற்ப நவீன கலாச் சாரத்தை தழுவி வடிவமை க்கப்பட்ட திருமண உடை களுடன் அழகு மின்னல்களாக அன்னநடை போட்டார்கள்.

ஆடை அணிவகுப்பிலே Swaroski Stones,Crystal Stone ,Kundan பதிக்கப்பட்ட Crepe ,Georgette,Crush Silk Tissue Ghagras போன்ற துணிவகை களுடன் இணைத்து இவ் ஆடை வடிவமைக்க ப்பட்டிருந்தது.

அடுத்ததாக எங்கள் தேசிய உடைகளில் ஒன்றாகிய சேலை களின் தொகுப்பிலே உயர்ரக வர்ணக் கலவை களுடன் கூடிய Crystal / Sworaski கற்கள் பதிக் கப்பட்ட சேலைகளும் அவற்று க்கேற்ப வடிவமைக்கப்பட்ட Blouses களையும் அணிந்து வந்த நங்கைகளில் அழகை வார்த்தை களால் வர்ணிக்க முடியாது.

அணிவகுப்பிலே தொடர்ந்தது மேலைத்தேய, கீழைத்தேய நாகரிக்க கலப்புடன் வடிவமைக்க ப்பட்ட ஆடைகளும் அனைவரது கவனத்தையும் ஈத்தது.



ஆண்களது ஆடைகளின் அணி வகுப்பிலே Kurti and Trousers களின் தொகுப்பிலே Chicken Work Kurti, Rich உயரக Embroidery and Swaroski Stone என்பன உடை தயாரிப்புக்கு பயன்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

அதுமாத்திரமன்றி Brocade Worke Bandini துப்பட்டா, Silk Crush சால்வைகளுடன் கூடிய சர்வாணி வகைகள் என்ப வற்றை அணிந்து ஆண்கள் மிடுக்காக நடந்தும் ஒரு அழகுதான்.

ஆண்கள் அனைவரையுமே ஜொல்லுவிட வைக்கும் மிகவும் கவர்ச்சி மிக்கதான பெண்களுக்குரிய மாலைநேர ஆடைகளின் அணிவகுப்பிலே மேலைத்தேய கலாச்சாரத்துக்கேற்ப Clup,Sunday Lunch,Opera போன்ற இடங்களுக்கு செல்லும் போது அணிந்து செல்லக்கூடியதாக வடி வமைக்கப்பட்டிருந்தது.

அனைத்துக் கலாச்சார ஆண்களுக்கும் இன்றி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## Fashion Show



யமையாத பிரதான உப ஆடையாக அமைந்த Tie இனுடைய வடிவமைப்பிலே பல நிறங்களில் வேறுபட்ட வடிவமைப்பையுடைய Sequins, Stonnes and Embroidery கூடிய Designer Tie கள் கண்களையே கவர்ந்தன.

மேலும் திருமணத்துக்குரிய உடைகள், இரவுநேர ஆடைகள் நாளாந்தம் நமது பாவனையில் உள்ள ஆடைகள் என்பவற்றுடன் Sequin, Sele Embrodiery உடன் கூடிய Drapes, Ball Gowns என்பவற்றின் வடிவமைப்பைக்கொண்ட ஆடைகளின் அணி வகுப் புடன் Barogue UK நிறுவ னத்தினுடைய Barogue UK 2004 Fashion Show இனிதே நிறைவாகியது.

இப் Fashion Show பற்றி அதன் நிர்வாக இயக்குனர் திருமதி நிரோ அவர்கள் கூறும் போது தமது நிறுவனம் தயாரிக்கின்ற ஆடைகளை இப்படியான Show மூலம் Textiles சந்தைக்கு அறிமுகப் படுத்துவதனால் தமது ஆடைகளுக்கான தேவையை (Demand) கூட்ட முடியும் என்ற நம்பிக்கையை கடந்த வருடம் நாம் நடத்திய Barogue UK 2003 Fashion Show எங்களுக்கு கற்றுத்தந்த பாடம் என்று கூறினார்.

எந்தவொரு பொருளையுமே அதற்குரிய வழியிலேயே அறிமுகப் படுத்தும் போதுதான் அதற்குரிய பெறுமதியை எம்மால் பெறமுடியும் என்பது உண்மைதான்.

உங்கள் வணிகம் சிறக்க
தமிழ் வணிகத்தை நாடுங்கள்
07949000506



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# R&S
## ACCOUNTANCY SERVICES

Company Formation/ Financial Services/ Tax Planning / Computerisede Payroll/ Accounting/ Family Tax, Child Tax Credit etc....

**Specialist In Arranging**

**COMMERCIAL LOANS**

**Don't Pay Too Much Agint Commission, Competitive Interest Rate, Free Advice on New Business Investment Matters and Accounting Matters**

**Contact SIVA | KANNAN**

Friendlier and more Flexible Services

**26,Spinnells Road, Rayners Lane, Harrow HA2 9RA**

020 8868 8779

challenge: we will beat any price

# SiGN FiT

MAIN SIGN FASCIA VINYL LETTERING A BOARD & BANNERS MENU SYSTEM & PHOTOSSCREEN PRINTING, WINDOW GRAPHIC

**020 8552 1194**

www.signfituk.com sales@signfituk.com

தமிழ் ஆங்கில மொழிகளில் கலை நயமிக்க முறையில் விளம்பரப்பலகைகள், பலவர்ண நியோன் மின்சாரக் கடை முகப்பு சைன்கள், கட்டவுட் வைனல்கள் எழுத்துக்கள், கார், வான்களில் விளம்பர எழுத்துக்கள் போன்ற பல விளம்பரத் தேவைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஓர் இடம்.

# SIVA BUILDERS

*Block Paving *Driveways and Patios *Tilling and Wallpapering *Painting & Decorating * Plastering

for a friendly service & free estmates

**Siva 07939 842 940**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசம் 2005

# 020 8665 2751




2005ம் ஆண்டிற்கான பிரித்தானியத் தமிழர் தகவல் ஏடு முரசம் வழமைபோல் தேசிய நினைவெழுச்சி நாளன்று வெளியிடப்படவுள்ளது தனித்துவம் வாய்ந்த அகரவரிசைத் தொகுப்பு, அகரவரிசைப் பொருளடக்கம் ஆகியவற்றுடன் சிறப்பாக வடிவமைக்கப்படும் தகவல்ப் பக்கங்கள், சிறப்பு வண்ணப்பக்கங்கள் கொண்ட தமிழ் வர்த்தக, சமூக சேவை நிறுவனங்களின் விபரங்கள், விளம்பரங்களுடன் மேலும்பல பயன்தரும் தகவல்களுடன் வெளிவரும் முரசம் 2005க்கான தயாரிப்பு வேலைகள் ஆரம்பமாகிவிட்டன. உங்கள் விபரங்கள் விளம்பரங்கள் இடம்பெற தொடர்புகொள்ளுங்கள்.

**முன்பக்க அட்டை, விளிம்பு, உள்பக்க அட்டை விளம்பரங்களுக்கு முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்**

**www.murasam.com** **info@murasam.com**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐபிசி தமிழ்

## ஐபிசி இல் விளம்பரம் செய்து உங்கள் வியாபாரத்தை பெருக்கிக் கொள்ளுங்கள்

மத்திய அலைவரிசை MW558 தினமும்
மாலை 7- 9PM இலண்டனிலும்

**ASTRA SATELLITE**
ஊடாக
**MTV-2 GERMAN POP CHANNELS**
**VIDEO 11.408 GMZ (HORIZONTAL)**
**AUDIO 7.92 MHZ**

**EUTEL SATELLITE HOTBIRD**
ஊடாக
**VIDEO 11.408 GMZ**
**AUDIO 7.92 MHZ**

ஐரோப்பிய வானலைகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது

நேரடி நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்கு அழையுங்கள்
**020 8100 0002**

உங்கள் விளம்பரங்களுக்கு அழையுங்கள்
**020 8100 0012**

"எடுத்த காரியம் யாவினும் வெற்றி"
IBC
INTERNATIONAL BROADCASTING CORPORATION-TAMIL

**03 COLLEGE FIELDS, PRIENCE GEORGES ROAD**
**COLLIERS WOOD,LONDON SW19 2PT**
**TEL:020 8100 0012 FAX:020 8100 0003**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# National Lottery இற்கு வயது 10

இந்த மாதம் 6ஆம் திகதியுடன் (06–11–2004) தனது பத்தாவது ஆண்டை பூர்த்தி செய்துள்ளது National Lottery இந்த பத்தாண்டுகளில் Lottery இல் ஏற்பட்ட வளர்சியினை இங்கு நாம் பார்போம்.

£1 பெறுமதியான National Lottery ஐ நீங்கள் எடுக்கும் போது நீங்களும் பொதுநலத்தொண்டுக்கென 28P கொடுக்கின்றீர்கள். அந்த வகையில் இந்த National Lottery கடந்து வந்த பத்தாண்டுகளில் ஏறத்தாழ 16 பில்லியன்களை பொதுநல சேவைகளுக்குகென வாரிவழங்கியிருக்கின்றது.

இங்கிலாந்தில் உள்ள 16 வயதுக்கு மேற்பட்டோரில் (16 வயதுக்குட்பட்டோருக்கு Lottery விற்பனை செய்வது சட்டப்படி குற்றமாகும்) 70% வீதமானோர் வாடிக்கையாக National Lottery வாங்குகிறார்கள்.

இது வரை ஏறத்தாழ 1700 மில்லியன்களை தன்னுடைய இலாபமாக பெற்றுள்ளது.

செக்கன் ஒன்றுக்கு National Lottery இல் வெற்றிபெறும் நபர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 3 பேர்களாகும்.
இதுவரை காலமும் கூடுதலாக அதிஷ்டம் அடித்த எண் 38 ஆகும் (165 தடவைகள் குலுக்கல் மூலம் தெரிவாகியது), குறைவாக தெரிவாகிய துரதிஷ்டமான எண் 13.

வாரம் ஒன்றுக்கு ஏறத்தாழ 10000 பேர்கள் தங்கள் தெரி இலக்கமாக 1,2,3,4,5,6 என்ற தொடர் இலக்கமாகவே தெரிவு செய்கிறார்கள் (ஆகா என்ன நம்பிக்கை)

National Lottery மூலம் இந்த 10 வருடத்தில் சில்லறை வியாபாரிகள் 2.4 மில்லியன் பவுண்களை தங்களுக்குரிய இலபமாகவும் பெற்று உள்ளனர்.

இப்படியான பல விடயங்களை தன்னகத்தே கொண்டு பல பல புதிய புதிய விளையாட்டுக்களையும் அறிமுகம் செய்து கொண்டும் தன்னுடைய 11 வயதிலே காலெடுத்து வைக்கும் National Lottery க்கு எமது 10 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Tax

தொழிற்கட்சி அரசாங்கத்தினால் கடந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமாகிய குழந்தைகளுக்கான சேமிப்புத் திட்டம். (Child Trust Fund) வருகின்ற வருடம் Aprial 2005 நடைமுறைக்கு வர இருக்கின்றது. இதனால் நீங்கள் அரசாங்கமானது உங்களது குழந்தைகளின் பெயரிலே ஒரு குறிப்பிட்ட தொகையான பணத்தை ஆரம்பத் தொகையாக வைப்பில் ஈட்டு ஒரு சேமிப்பு கணக்கை ஆரம்பிப்பதற்கு உதவி புரிகின்றது.


மேலும் உங்கள் பிள்ளையின்

# அதிஷ்டம் உள்ள குழந்தைகள்

S.Siva
Registered Tax Adviser

எப்படியான அனு கூலங்களை பெறக்கூடியதாக இரு க்கும் என்பதனை இந்த இதழிலே பார்போம்.

இத் திட்டத்தின் கீழ் 1st September 2002 இல் அல்லது அதற்கு பிறகு பிறந்த குழந்தைகள் தகுதியுடைவர்களாகின்றனர். இதற்கிணங்க பெயரில் ஆரம்பிக்கபட்ட கணக்கில் நீங்கள் விரும்பும் பச்சத்தில் மாத மாதம் ஒரு குறிப்பிட்ட தொகை பணத்தையும் வைப்பு செய்யலாம்.



உங்களால் இக்கணக்கில் வைப்பில் ஈடப்படும் பணத்தை உங்களது குழந்தை தன்னுடைய பதினெட்டாவது வயதிலேயே மீளப் பெறக்கூடியதாக இருக் கும்.

இச் சேமிப்புத் திட்டத்திலே நீங்களும் உங்கள் குழந்தையும் தகுதி பெற வேண்டுமாயின் நீங்கள் ஐக்கிய இராச்சிய பிரஜையாக இருப்பதுடன்.

அத்துடன் நான் கடந்த பல இதழ்களில் குறிப்பிட்ட பிள்ளைகளுக்கான கொடுப்பனவை (Child Benefit) பெறக் கூடிய குடும்பமாக இருக்க வேண்டும். அல்லது அதற்கு தகுதியுடைய வர்களாகவும் இருக்க வேண்டும். அத்துடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிப் பிட்டது போல் 1st September 2002 இல் அல்லது அதற்கு பின்பு பிறந்த குழந்தையாக இருப்பின் இத்திட்டத் தின் கீழ் நீங்களும் தகுதியுடைய வர்களாகின் றீர்கள்.

நீங்களும், உங்களது குழந்தையும் இத்திட்டத்திற்கு தகுதியுடையவர் களாகின்றீர்கள் எனின் அர சாங்கமானது இச் சேமிப்புத் திட்டத்திற்கு என ஒரு குழந்தைக்கு £250 பெறு மதியான Voucher இனை அனுப்பி வைக்கும். அதுமாத்திர மன்றி



உங்களது குடும்ப வருமானமானது தற் பொழுது £13480 க்கு குறைவாக இருக்கும் எனின் உங்களது பிள்ளைக்கு மேலதிமாகவும் £250 பெறுமதியான Voucher ஐயும் சேர்த்து £500 பெறுமதியான Voucher பெறக் கூடியதாக இருக்கும். மேலும் இந்த Voucher ஆனாது எந்த பிள்ளைக்கு கொடுக்கப் படுகின்றதோ அப் பிள்ளையின் சொந்த பெயரிலேயே Voucher அனுப்பி வைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (முன்னைய பாலுக்கான Voucher இனால் ஏற்பட்ட அனுபவங்கள்).

இந்த Voucher ஐ நீங்கள் விரும்பிய எதாவது ஒரு வங்கிலோ அல்லது முதலீட்டு நிறுவனம் ஒன்றில் வைப்பாக ஈட்டு Stakeholder Child Trust Fund என்ற சேமிப்பு முதிலீட்டு கணக்கை திறந்து இச் Child Trust Fund முதலீட்டு திட்டத்தை ஆரம்பித்துவைக்கலாம்.

மேற்கூறிப்பிட்ட Voucher ஐ பெற்றும் நீங்கள் ஒரு வருடத்திற்குள் சேமி ப்புக் கணக்கை ஆரம்பிக்காத பச்ச த்தில் அரசாங்கமே அப்பிள்ளை யின் பெயரிலே இம் முதலீட்டு திட டத்தை ஆரம்பிக்கும் என்பதும் குறிப்பிடத்தக்க ஒரு நல்ல விடய மாகும்.

இத்திட்டத்தின் விபரங்களும், பண Voucher களும் January 2005 இல் இருந்து March 2005 உள்ளான காலப்பகுதியில் பிள்ளை களின் பிறந்த திக திக்கேற்ப உங்களுக்கு அனுப்பி வைக்கப் படும்.

***உதாரணமாக***
September 2002 இல் இருந்து March 2003 க்குள் பிறந்த பிள்ளைகளுக்கு March 2005 இலும்


April 2003 இல் இருந்து March 2004 க்குள் பிறந்த பிள்ளைகளுக்கு February 2005 இலும்

April 2004 இல் இருந்து March 2005 க்குள் பிறந்த பிள்ளைகளுக்கு March 2005/Aprial 2005 இலும் இந்த Voucher அனுப்பிவைக்கப் படும்.

இங்கு குறிப்பிடத்தக்க ஒரு விடயம் என்னவெனில் நீங்கள் இவ் Voucher இனை January 2005 இல் பெற்றுக்கொண்டாலும் 6th Aprial 2005 இல் இருந்தே இவ் வங்கிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Tax



கணக்கை ஆரம்பிக்க முடியும் என்பதனையும் கவனத்தில் கொள் ளவும்.

இந்த கணக்கினை அரசாங்கம் கொடுத்த £250 Voucher தொகையை கொண்டு ஆரம்பித்தாலும் அப்பிள் ளையின் பெற்றோரோ அல்லது குடும்பமோ மாதம் மாதம் ஒரு குறிப்பிட்ட அளவு தொகையை வைப்பு செய்யலாம் இருப்பினும் இத் தொகை வருடம் £1200 க்குள்ளாக இருப்பின் அதில் இருந்து வரும் வருமானத்துக்கு வரி செலுத்த தேவையில்லை என்பத னையும் கவனத்தில் கொள்ளலாம். அதுமாத்திரமன்றி இப்பிள்ளையின் ஏழாவது வயதிலே அரசாங்கமானது இன்னொரு குறிப்பிட்ட தொகை யான Voucher வழங்க தீர்மானித் துள்ளது. (Voucher தொகை இன்னும் தீர்மானிக்கப் படவில்லை)

இந்தக் கணக்கில் இருந்து பெறப் பட்ட வருமானத்தற்கோ அல்லது Gain க்கோ Income Tax செலுத்த தேவையில்லை. அத்துடன் இத்தொ கையைப் பெறுவதற்கு விண்ணப்ப படிவம் எதனையும் நிரப்ப வேண் டிய அவசியமும் இல்லை. Child Benefit ஐ பெறுபவர்கள் தாமாகவே இதைப்பெற்றுக் கொள்வர்.

எனவே அன்பு வாசகர்களே உங்களது பிள்ளைகளின் மேற் படிப்புக்கு தேவையான ஒரு அத்திவாரத்தை அரசாங்கமே ஆரம் பித்து தருகிறது அதனை தவற விடாது பெறுவதற்கும் ஆவன செய் வதற்கு தயாராகுங்கள் மீண்டும் மேலதிக விபரங்களுடன் அடுத்த இதழிலே சந்திக்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## Biography




பெரும்பாலும் எந்த ஒரு நிறுவனமுமே தனியே குறிப்பிட்ட சிலரை கவரத்தக்க வகையிலேயே தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். அதற்குமாறாக சின்னஞ்சிறு குழந்தைகள் முதல் வயதுபோன பெரிசுகளையும் ஒரே நேரத்தில் கவரக்கூடிய வகையில் இன்று இருக்கின்ற உணவகமாக திகழ்கிறது Mc Donalds

Mc Donalds நிறுவனமானது இங்கிலாந்தில் இவ்வாண்டுடன் தனது 30ஆவது ஆண்டை நிறைவு செய்து கொள்கின்றது. இங்கு மாத்திரம் 2.5 மில்லியன் வாடிக்கையாளர்களை தன்னகத்தே கொண்டுள்ளது என ஒரு பொருளாதார அறிக்கை கூறுகின்றது.

எதிலுமே உலகில் முதலிடத்தை வகிக்கின்ற நாடாகிய அமெரிக்கா இதிலும் விதிவிலக்கு இல்லாமல் இவ் உணவகதின் தாய் நாடாகவும் இருக்கிறது. Dick, Mac எனும் இரு சகோதரர்களும் தமது குடும்ப பெயரையே உணவகப் பெயராக கொண்டு Chicago நகரிலுள்ள சிறிய நகராகிய San Bernardino இல் Mc Donalds உணவகத்தை நிறுவினார்கள். ஆரம்ப காலத்திலே இவ் உணவகம் ஊரில் ஒரு கதிரையுடன் இயங்குகின்ற தேனீர் கடைபோல் அமைக்கப்பட்டாலும் மிகவும் அழகாக அமைக்கப்பட்டு இருந்தது.




Milk Shake இயந்திரங்களை விற்பனை செய்து வந்த Ray Kroc ஒரு நாள் தன்னுடைய வியாபார விடயமாக Chicago நகரில் Dick,Mac சகோதரர்கள் நடாத்தி வந்த உணவகத்துக்கு சென்றிருந்தார். அங்கு அவர் கண்ட காட்சி அவரை வியப்புக்குள்ளாக்கியது எனேனில் அக்காலங்களிலே எந்த ஒரு உணவகத்துக்கு சென்றாலும் உணவு தயாரிப்பதற்கு பல மணி நேரத்தை எடுப்பதனால் காத்திருக்கும் நேரமும் அதிகமாகவே இருந்தது ஆனால் Mc Donalds உணவகத்திலே இவ் இரு சகோதரர்களும் மிகவும் தரமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவை சுறுசுறுப்பாக தயாரித்து சுத்தமாகவும் விரைவாகவும் வழங்கி யமையை கண்டதனால் ஆகும்.

அவர்களது வியாபார நடவடிக்கையை பார்த்த Ray Kroc. Mc Donalds சகோதரர்களுடன் தானும் இணைந்து அவ்வியாபாரத்தில் சாதனைகளை நிகழ்த்த வேண்டும் என்ற அப்போதைய யோசனைக்கு உடனடியாகவே செயல் வடிவம் கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் பல பேச்சுவார்த்தைகளின் பின்பு அவ் இரு சகோதர் களுடன் ஒரு வியாபார உடன்படிக்கையை மேற்கொண்டு Mc Donalds உணவகத்தை Mc Donalds Corporation என்ற பெயரிலே முதலாவது Mc Donalds உணவகத்தை 1954ம் ஆண்டு Chicago நகருக்கு அருகாமையில் உள்ள சிறிய நகரமாகிய Illinois இலுள்ள Des Plaines இல் Frachise முறையில் முதலாவது Mc Donalds



உணவகத்தை நிறுவினார்கள்.

Mc Donalds உணவகம் ஆரம்பிக்கப் பட்ட நான்கே ஆண்டு காலத்தில் தன்னுடைய 100 ஆவது உணவகத்தை Chicago நகரில்







அமைத்துக் கொண்டது.

1961ம் ஆண்டளவில் Dick,Mac சகோதரர்கள் தம்முடைய பிழை யான வியாபார முடிவினால் தாம் கொண்டிருந்த Mc Donalds உண வகத்தின் அனைத்து பங்குகளையும் Ray Kroc அவர்களுக்கு 2.7 மில்லியன் அமெரிக்கன் டொலர் பெறுமதிக்கு விற்பனை செய்தார்கள்.

அதன் பின் 1963 இல் Mc Donalds ஒரு பில்லியன் காம் பேக்கரை விற்பனை செய்ததுடன் 500க்கு மேற்பட்ட உணவகங்களையும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்த Ray Kroc இன் Mc Donalds உணவகத்தின் தேறிய வருமானம் 1 மில்லியன் அமெரிக்க டொலர்களை தொட்டதுடன் 1966ம் ஆண்டளவில் New yourk பங்குச் சந்தையிலே தர வரிசைப் படுத்தப் பட்டது.

அதன் பின் அடுத்த ஆண்டே 1967 ஆண்டு முதல் முதலாக அமெரிக்காவுக்கு வெளியே Canada,Puerto Rico ஆகிய வெளிநாடுகளிலும் தன்னுடைய கிளையை பரப்ப தொடங்கியது அதன் தொடர்ச்சியாக 1974ம் ஆண்டு இங்கிலாந்தின் Woolwich நகரில் தன்னுடைய முதலாவது கிளையை ஆரம்பித்தது. இக் கிளை தான் Mc Donalds உணவகத்தின் 3000 ஆவது கிளை நிறுவனம் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.




மேலை நாடுகளில் வெற்றிக் கொடி கட்டிய Mc Donalds உணவகம் கீழத்தேயத்திலும் தன்னுடைய காலினை 1978ம் ஆண்டளவில் Japan இல் Kanagawa நகரில் உலகின் 5000 ஆவது Mc Donalds உணவகத்தை நிறுவியது. முதலாவது ஆண்டிலே இக் கிளை நிறுவனத்தின் வருமானமானது ஏறத்தாழ 1 மில்லியன் அமெரிக்க டொலரை



தொட்டது.

இன்று இலங்கை இந்திய உட்பட உலகின் 131 நாடுகளில் தன்னுடைய 31000 கிளையும், ஏறத்தாழ 1.5 மில்லியன் வேலையாட்களையும் கொண்டு வியாபார உலகில் வெற்றிக் கொடி கட்டியுள்ள Mc Donalds உணவகம் நாளுக்கு நாள் புதிய புதிய வியாபார உத்திகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது குறிப்பாக சின்னச் சிறு குழந்தைகளை கவரத்தக்க வகையில் Hamburger உணவுடன் சிறிய ரக விளையாட்டுப் பொருட்களையும் சேர்த்து Happy Meal என்ற உணவு வகையையும் தமது உணவுப் பட்டியலில் சேர்த்துள்ளார்கள். அதுமாத்திரமன்றி காலை 7 மணிக்கே 5 வகையான உணவுகளை Brak Fast ஆக வழங்குகிறார்கள். அத்துடன் இன்றைய கடுகதி உலகில் உங்களது நேரத்தை மீச்சப்படுத்தும் நோக்குடன் Mc Donalds


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இருக்கின்ற இவ் உணவகத்துக்கு நாள் ஒன்றுக்கு செல்கின்ற வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 46 மில்லியன்களாகும். அப்படியாயின் இவ் நிறுவனத்தின் ஒரு நாள் வருமானம் எவ்வளவாக இருக்கும்! கூட்டிக் கழிச்சு பாருங்கள்.

உணவகத்தால் அறிமுகப் படுத்தப் பட்டுள்ளது Drive Thru சேவை ஆகும்.

இப்படியான புதிய புதிய வழிமுறைகளை அறிமுகம் செய்கின்ற இவ் உணவகம் 60 ஆண்டு கால வரலாற்றை கொண்டுள்ள போதும் தன்னுடைய பெயரை மாற்ற வேண்டும் என்று நினைக்கவில்லை என்பதை நீங்கள் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும். இத்துடன் உலகம் எல்லாம்

Mc Donalds உணவகத்தின் இத்தகைய வளர்ச்சிக்கு முக்கிய காரணம் என்ன என்று யோசித்து பார்த்தீர்கள் எனின் அன்று தொட்டு இன்று வரை தமது தரம், சேவை, சுத்தம் என்பவற்றில் இம்மியளவும் பிசகாமல் இருப்பதுடன், ஒழுங்கான வியாபார திட்டமிடலும், வாடிக்கையாளர்களை கவரத்தக்க வகையில் அறிமுகப்படுத்தும் புதிய புதிய உத்திகளும் தான் இவ் நிறுவனத்தின் அசுர வளர்ச்சிக்கு மிகமிக முக்கிய காரணம் எனலாம்.







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஊர் உணவுப் பொருட்களில் உயர்ந்தவன் Kings



Kings,Shankar, Mama என்ற
பெயர்களிலே அனைத்து வகையான
தாயக உணவுப் பொருட்களையும்
நிங்கள் விரும்பிய அளவுகளிலே
அனைத்து தமிழ்க் கடைகளிலும்
பெற்றுக்கொள்ளகூடியதாக இருப்பதுடன்
**MD,LARICH, ELEPHANT SOFT DRINKS** போன்ற பொருட்களையும்
நாம் இலங்கையில் இருந்து தருவித்து
வினியோகிக்கிறோம்.



சில்லறை வியாபாரிகள் அனைவருக்கும் சிறப்பான
விலை தர நாம் காத்திருக்கிறோம் எம்முடன் தொடர்பு
கொள்ளும்

**T:020 8900 2566**
**F:020 8795 0141**
**M:07930 748 465**

**KF Trading Ltd**
100 Beresford Avenue,Alperton, Wembley,Middlesex HA0 1QJ,e-mail: kftradingltd@




Delivered with Speed - Trust & Care to Sri Lanka

**House of Lanka** *We Deliver Your Gifts To Sri Lanka...*

House of Lanka

How to place an order

**By Person**

Call in to our House of Lanka offices at 125-127, Bramley road, Oakwood, London. N14 4UT (Adjoining Oakwood Tube station - Piccadilly Line) and place your order.

**By Phone**

Ring our Order Hotline on 020 8886 4488, Mon- Sat 9.30a.m - 6.00p.m Sun,10.00a.m - 4.00p.m. Mention Your Requirment & we confirm your Order.

**On the WEB**- www.houseoflanka.com

Simply browse through our extensive range of Gifts and Products on offer and make your selection. Pay online.

**Our Delivery Promise***

Next day delivery within Colombo city limits and many selected areas. 48Hrs delivery service to all other locations.

**Payment Options**

Pay by cash - Pay online
Pay by credit / debit card
Pay at BARCLAYS
A/C Name : C. E. C Ltd.
A/C NO : 70713945
Sort : 20 - 36 - 47

*For more information Call:**

www.houseoflanka.com **020 8886 4488**

பண்டிகைக் காலம் எதுவென்றாலும் உங்கள் பரிசுப்பொருட்கள் வீடு சேர்ப்போம்

ලංකාවේ වෙසෙන ඔබගේ ආදරණිය නෑදෑ හිතමිතුරන්ට තෑගි භාණ්ඩ වේගවත්ව හා සුරක්ෂිතව දොරකඩටම යැවීමේ සේවය අපෙන්...

House of Lanka

**www.houseoflanka.com**

Gifts for BIRTHDAYS - ANNIVERSARIES - WEDDINGS - FESTIVALS
SPECIAL EVENTS - SYMPATHIES & ALL OTHER OCCASIONS

*Cakes - Flowers - Fruit Baskets - Hampers - Electricals & Special Gifts*

*Delivered to the Loved Ones...*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org